DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.343/2021**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேந்திரன் | | : |
| த/பெ | : நடேசன் | மதம் | : |
| கிராமம் | : திருமுல்லைவாயில் | தொழில் | : ஓய்வு |
| வட்டம் | : சென்னை | வயது | : 74/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 03.02.2026**
**<u>குறுக்கு விசாரணை:</u> PW1**

1. பு.சா.ஆ.8 ஒப்பந்தமானது எனக்கும் எதிரிக்கும் இடையே போடப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் தேதி போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் B.Com படித்துள்ளேன். நான் Commercial Employee Co-operative Society ல் AGM ஆக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். ஒரு ஒப்பந்தத்தில் தேதி மிக முக்கியம் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து சங்கதியும் படித்து பார்த்து சரி என்று தெரிந்து தான் கையெழுத்து செய்தேன். பிரமாண வாக்குமூலம் பத்தி 6 ல் 8 வது வரியில் ரூ.20 ற்கான முத்திரை தாளில் தான் 4 ஒப்பந்தமும் போடப்பட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அதே பத்தியில் 6 மாதத்தில் கடனை திருப்பி செலுத்துவதாக தான் ஒரு காசோலை தரப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். 6 மாதம் கழித்து முதலீடு செய்த தொகை மட்டும் திருப்பி தருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக தான் அந்த காசோலை எண்.000221 தரப்பட்டதாக பிரமாண

வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்தம் 4 முதலீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். ஒன்று என் மகன் விஜயகுமார் பெயரில் ரூ.1,00,000/– மனைவி பத்மாவதி பெயரில் ரூ.1,00,000/– மும் மோனிகா வெங்கடரத்தினம் என்பவரது பெயரில் ரூ.50,000/– மும் மற்றும் என் மனைவி பெயரில் மற்றொரு ரூ.15,00,000/– மும் முதலீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். ஒவ்வொரு முறையும் முதலீடு செய்யும் ஒரு முன் தேதியிட்ட காசோலை மற்றும் ஒரு ஒப்பந்தம் தரப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தமானது (பு.சா.ஆ.3,6,7) செயல்பாட்டிற்கு வந்த நாளில் இருந்து 6 மாதம் காலத்திற்குள் 09.11.2020 முதல் 09.05.2021 வரை என காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். பு.சா.ஆ.8 ஆவணமானது செயல்பாட்டிற்கு வந்த நாளில் இருந்து 6 மாத காலமானது 12.11.2020 முதல் 12.05.2021 என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 6 மாத காலத்தில் எந்த பணமும் தரமாட்டார்கள் என்றால் சரிதான். ரூ.15,00,000/– த்திற்கான ஒப்பந்தத்தில் Returns தருவதாக காணப்பட்டுள்ளது வட்டி என்ற வார்த்தை இல்லை என்றால் 30% மாத வட்டிக்கு தான் பணம் கொடுத்தேன். 6 மாதத்திற்கு பின்பு வட்டி தொகையுடன் அசல் தொகையும் சேர்த்து தருவார்களா என்றால் இல்லை வட்டி தொகை மட்டும் தான் தருவார்கள். புகார் மனுவில் 8 ஆவணங்களும்ள நகல் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், குறியீடு செய்யும் போது அசல் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். புகார் மனுவில் காணப்பட்டுள்ள 7 மற்றும் 8 வது பட்டியல் செய்யப்பட்ட ஆவணங்களின் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரி வாடகைக்கு இருந்தார், வாடகை சரிவர எதிரி செலுத்தவில்லை. எதிரி வாடகை சரியான தினத்தில் தரமாட்டார் ஆனால் பாக்கி எதுவும் இல்லை வாடகை அனைத்தும் செலுத்திவிட்டார். எதிரியுடன் மனஸ்தாபம்

ஏற்பட்டதால் வீட்டை காலி செய்துவிட்டேன் என்றால் சரியல்ல, எதிரியே காலி செய்து விட்டார், எந்த ஆண்டு என்று ஞாபகமில்லை. நான் செய்த அனைத்து முதலீடு காசோலை அல்லது ரொக்க பணமாக தரப்பட்டதா என்றால் ரூ.13,80,000/- த்திற்கு காசோலை கொடுத்தேன். மீதி ரூ.1,20,000/- ம் ரொக்க பணமாக கொடுத்தேன். மீதிதொகை அனைத்தும் ரொக்க பணமாக தான் கொடுத்தேன். நான் வட்டிக்கு பணம் கொடுத்தது எனது வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி எனக்கு வட்டி தொகை ரொக்க பணமாகவும் தருவார் Gpay மூலமும் செலுத்தியுள்ளார். எதிரிக்கு நஷ்டம் ஏற்பட்டதால் அலுவலகத்தை காலி செய்து சென்றுவிட்டார். பிரமாண வாக்குமூலம் பத்தி 3 ல் Agreement of Investment தாக்கல் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். Shanmuga Exports என்ற நிறுவனத்தில் நான் முதலீடு செய்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக நிறுவனத்தில் முதலீடு செய்தால் அதில் ஏற்படும் நஷ்டத்திற்கு Returns தரப்படாது என்றால் நஷ்டம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியாது. நான் முதலீடு செய்த பணத்தை சிறுது சிறுதாக எதிரி திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எதிரியின் வங்கி Statement of Accounts இவ்வழக்கில் தாக்கல் செய்த காசோலையுடன் ஒப்பிட்டு பார்த்ததில் உறுதி செய்யப்பட்டது அதில் உள்ள விரவங்கள் குறித்து எதிர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்கிறார். 01.12.2020 ம் தேதி ரூ.1,02,000/- எதிரி எனது மனைவி பத்மாவதிக்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது வட்டித்தொகையாகும். 06.01.2021 ம் தேதி ரூ.90,000/- என் மனைவி பத்மாவதி கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது வட்டித்தொகையாகும். 11.02.2021 ம் தேதி ரூ.2,18,250/- எதிரி எனது கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது

வட்டித்தொகையாகும். 10.03.2021 ம் தேதி ரூ.1,75,000/- எதிரி எனது கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது வட்டித்தொகையாகும். 01.12.2020 ம் தேதி ரூ.12,000/- எதிரி எனது மகன் விஜயகுமார் கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். 02.02.2021 ம் தேதி ரூ.45,000/- எதிரி எனது மகன் விஜயகுமார் கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது வட்டித்தொகையாகும். 10.11.2020 ம் தேதி ரூ.21,000/- எதிரி எனது கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது வாடகையாகும். 19.11.2020 ம் தேதி ரூ.20,000/- எதிரி எனது கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது வாடகையாகும். 09.12.2020 ம் தேதி ரூ.21,750/- எதிரி எனது கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது வாடகையாகும். 10.12.2020 ம் தேதி ரூ.28,000/- எதிரி எனது கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது வாடகையாகும். 09.03.2020 ம் தேதி ரூ.10,250/- எதிரி எனது கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது வாடகையாகும். 18.03.2021 ம் தேதி ரூ.40,000/- எதிரி எனது கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது வட்டித்தொகையாகும். 09.04.2021 ம் தேதி ரூ.15,000/- எதிரி என் மகன் விஜயகுமார் கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது வாடகையாகும். 06.05.2021 ம் தேதி ரூ.10,000/- எதிரி எனது Gpay கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அது வாடகையாகும். 14.03.2022 தேதி, 16.03.2022, 17.03.2022 ரூ.900/- 3 முறை எதிரி என் மகன் விஜயகுமார் கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். எதிரி வாங்கிய முதலீட்டு தொகை முழுவதும் சிறிது சிறிதாக செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. Consolidate cheque பிணைக்காக எதிரியிடம் இருந்து வாங்கப்பட்டது அதை நான் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.17,50,000/- எதிரி

எனக்கு தரவேண்டிய முழுத்தொகை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

வழக்கறிஞர் அவகாசம் கோரியதின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K